TAMIL NADU LEGISLATURE LIBRARY
20 JUL 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1972 மார்ச் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், **திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 690, 691 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் இரண்டும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அரசு ஊழியர்களுக்கு திருமண முன்பணம்

*690 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971–72-ல் அரசு ஊழியர்கட்குத் திருமணக் கடன் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) இதுவரை வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ரூ. 40.00 இலட்சம்.

(இ) ரூ. 40,45,039.

*691 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount of marriage loan so far disbursed to Government employees during the year 1970–71 ; and

(*b*) whether there is any proposal to extend the benefit to the employees who are working under local bodies ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ரூ. 33,52,869.

(இ) அரசுக் கடன் உதவியின்றிச் செலவு ஏற்கும் அளவிற்குப் போதிய நிதி வசதியைக் கொண்ட நகராட்சி மன்றங்களின் ஊழியர்களுக்கும் திருமணக் கடனுதவி அளிக்கும் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தத் திருமணக் கடன் வசதி ஒவ்வொரு அதிகாரியும் வகிக்கின்ற பதவிக்கேற்ப கொடுக்கப்படுகிறதா ? அல்லது, அவரவர்களுடைய சம்பள அடிப்படையில் தரப்படுகிறதா ?